Phone : 04346 - 246212
E-mail : prucaspappireddipatti@gmail.com
Website : https://www.gascprp.in

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# பாப்பிரெட்டிப்பட்டி - 636 905.
# தருமபுரி மாவட்டம்.



# ஆண்டு மலர் 2022 - 2023

# பட்டமளிப்பு விழா (2022 - 2023)


















# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பாப்பிரெட்டிப்பட்டி,

தருமபுரி மாவட்டம் - 636 905.

# ஆண்டு மலர்

# 2022 - 2023

# பொருளடக்கம்


மலர்க்குழு -

மலர் முகம் -

இலக்கு, குறிக்கோள் (Vision, Mission) -

கல்லூரி முன்னாள் முதல்வர்கள் -

கல்லூரி முதல்வர் -

வாழ்த்துரைகள் -

கல்லூரி ஆண்டறிக்கை -

துறை நிகழ்வுகள் -

ஆசிரியர், மாணவ மாணவியர் படைப்புகள் -

## மலர்க்குழு




முனைவர். **வே.அன்பரசி,** எம்.ஏ.,எம்.ஏ., எம்.எட்.,எம்ஃபில்.,பிஎச்.டி.,

**முதல்வர்**



முனைவர் **பொ.செந்தில்குமார்,**

தமிழ் உதவிப்பேராசிரியர், சமூகவியல் துறைத்தலைவர் (பொ)



முனைவர் **ந.ரமேஷ்,**

ஆங்கில உதவிப்பேராசிரியர்



முனைவர் **இ.சுஜிதா,**

தமிழ் உதவிப்பேராசிரியர்

# மலர் முகம்

கற்றல் படைப்பாற்றலை அளிக்கிறது
படைப்பாற்றல் சிந்தனைக்கு வழிவகுக்கிறது
சிந்தனை அறிவை வழங்குகிறது
அறிவு உங்களை சிறந்ததாக்குகிறது.

- டாக்டர். ஏ.பெ.ஜெ.அப்துல்கலாம்.

அன்பு வணக்கம்,

உங்கள் கரங்களில் இருப்பது எமது பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 2022-2023-ம் கல்வி ஆண்டு மலர் ஒரு குழந்தையை நாளைய இளைஞர்களுக்கு விட்டுச் செல்லும் முழு பொறுப்பும் கல்வி முறைக்கு உண்டு என்பதை தெளிவுபடுத்துகின்ற திறன்மிகு ஆசிரியர்கள், சிறந்த நிர்வாகம், உத்வேகத்துடன் கூடிய மாணவர்கள் என இக்கல்லூரியின் பெருமைகளை கூறிக்கொண்டே செல்லலாம். நிலவின் அகலத்தை கை கொண்டு சுருக்குவதுபோல இவ்வாண்டு மலரின் கல்லூரி ஆற்றல்மிக்க செயல்பாடுகளை இம்மலரின் மூலம் வெளிப்படுத்தியுள்ளோம்.

இம்மலருக்கு மேலும் மணமூட்டும் வண்ணம் கல்லூரிக்கல்வி இணை இயக்குநர், பெரியார்ப்பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர் ஆகியோரது வாழ்த்துரைகள் அமைந்துள்ளன. வாழ்த்துரை வழங்கிய அனைத்து சான்றோர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

கல்லூரியின் செயலாற்றல்மிக்க துறைத்தலைவர்களும் பேராசிரியர்களும் இம்மலர் சிறக்கத் தேனீக்களாய்ச் செயல்பாடுகளைச் சேகரித்தளித்தனர். அவர்கள் அனைவருக்கும் இம்மலர்க்குழு நயத்தக்க நன்றிகளைச் சமர்ப்பிக்கிறது.

கல்லூரியின் நிர்வாகச் செயல்பாடுகளை நிரல்படத் தந்துதவிய கல்லூரி அலுவலக நண்பர்களுக்கு அன்பான நன்றிகள்.

ஆண்டுமலரை அலங்கரிக்கும் ஆர்வமுடன் எம்மாணவர்கள் தங்கள் திறமைகளைச் செதுக்கியளித்து உதவியுள்ளனர். மலர் சிறக்க தங்கள் படைப்புகளை வழங்கிய மாணவ மணிகளுக்கு எமது அன்பு வாழ்த்துக்கள்.

மலர்க்குழு

முனைவர் **வே.அன்பரசி,** முதல்வர்.

முனைவர் **பொ.செந்தில்குமார்**

முனைவர் **ந.ரமேஷ்**

முனைவர் **இ.சுஜிதா**

**இலக்கு :**

சமுதாயத்திலும், பொருளாளதாரத்திலும் பின்தங்கியுள்ள மாணவர்களை, திறன் மேம்பாடு, ஆற்றல், விவேகம் மற்றும் திறமைபெற்ற சமூக சிந்தனை, குடிமை பொறுப்பு,மற்றும் தேசிய உணர்வு கூடிய தனி மனிதர்களாய் உருவாகிடும்வண்ணம், தரமான உயர்க்கல்வியினை வழங்குதல்.

**குறிக்கோள் :**

1. தொழில் நுட்பம் இணைப்பெற்ற கற்றல்முறைகளின் வழியே, ஒருமுழுமையான கல்விச்சூழலையும், ஆராய்ச்சி நுண்திறனையும் அளித்து, உரம் ஊட்டுதல்.

2. மாணவர்களுக்கு வாழ்வியல் மற்றும் வேலை வாய்ப்பிற்கு தேவையான திறன்களை மேம்பட செய்து, அவர்களின் சொந்த எல்லைகளை உள்ளூரிலிருந்து உலகிற்கு விரிவடையச் செய்தல்.

3. தொழில் நேர்மையுடன், நிபுணத்துவம் பெற்ற தனிமனிதர்களாக மலரும் வண்ணம், சிறந்த பண்பு நலன்களை பெறச்செய்தல்.

4. பொறுப்புணர்வும், கடமையுணர்வும் பெற்ற குடிமக்களாக மாணாக்கர்களை பரிணமிக்க செய்தல்.

## VISION :

To impart quality higher education to socially and economically underprivileged students so as to transform them into skilled, proficient, sensible and competent indiviuals with social sensitivity, civil responsibility and national consciousness

## MISSION :

1. To empower with a holistic acadamic ambience and research acumen through techno - integrated teaching pedagogy.

2. To equip students with life and employability skills expanding the margins from local to global.

3. To inculcate sustainable values to bloom into distinct personals with professional integrity.

4. To enable students evolve into responsible and committed citizens.

# பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம் - 636 905.**

## முதல்வர்கள்



முனைவர் க.மருதமுத்து (முதல்வர் பொ)
எம்.காம்.,எம்பில்.,பி.எட்.,எம்.பி.ஏ.,பிஎச்.டி.,
(17.08.2011 - 20.07.2014)



முனைவர் கு.செல்வம் (முதல்வர் பொ)
எம்.எஸ்சி.,எம்பில்.,பிஎச்.டி.,
(23.07.2014 - 11.02.2015)



முனைவர் ந.இரவீந்திரநாத் தாகூர்
எம்.ஏ.,எம்பில்.,பி.எட்.,பிஎச்.டி.,
(12.02.2015 - 20.10.2016)



முனைவர் கு.அன்பரசு, (முதல்வர் பொ)
எம்.எஸ்சி.,பிஎச்.டி.,
(21.10.2016 - 25.01.2017)



முனைவர் பொ.செந்தில்குமார், (முதல்வர் பொ)
எம்.ஏ.,(தமிழ்) எம்.ஏ.,(மொழியியல்) பிஎச்.டி.,பி.ஜி.டி.சி.ஏ.,
(27.01.2017 - 01.03.2017)



முனைவர் பா.கார்த்திகேயன்,
எம்.எஸ்சி.,எம்.எட்.,எம்பில்.,பிஎச்.டி.,
(02.03.2017 - 18.01.2023)

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம் - 636 905.**

## முதல்வர்



முனைவர் வே.அன்பரசி, (முதல்வர் பொ)
எம்.ஏ.,எம்.ஏ., எம்.எட்.,எம்பில்.,பிஎச்.டி.,
(21.10.2022 - 04.03.2023) & 04.03.2023 -

# கல்லூரி முதல்வர்




**முனைவர். வே.அன்பரசி**

எம்.ஏ.,எம்.ஏ., எம்.எட்.,எம்ஃபில்.,பிஎச்.டி.,

முதல்வர்

# கல்லூரிக் கல்வி இணை இயக்ககம், தருமபுரி மண்டலம், தருமபுரி - 636 705.

தொலைப்பேசி : 04342 - 233177
தொலைநிகரி : 04342 - 233199
E-Mail ID : dharamapurirjd705@gmail.com.

முனைவர் நா. இராமலட்சுமி
எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பிஎச்.டி.,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
தருமபுரி மண்டலம்.




நாள் : 25.09.2023

## வாழ்த்து செய்தி

**அம்மையீர்**

தமிழக உயர்கல்வியின் அடையாளங்களைத் தாங்கி நிற்கும் பெருமைமிகு பெரியார் பல்கலைக்கழகத்தின் கீழ் உருவாகி அரசு கல்லூரியாக வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பாப்பிரெட்டிப்பட்டி 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கான ஆண்டு மலர் வெளியிடுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. ஏழை, எளிய, நடுத்தர மழைவாழ் (பழங்குடியின) மக்கள் வாழுகின்ற பகுதியின் இயற்கை எழில்சூழ் மலைகளின் நடுவில் அமைந்திருக்கும் இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களுக்கு உயர்கல்வி வழங்கி வரும் முதல்வர், ஆசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்களின் பணிகள் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்குரியனவாகும்.

இக்கல்லூரியில் இளநிலைப் பாடப்பிரிவுகள், முதுநிலைப் பாடப்பிரிவுகள், முனைவர் பட்ட ஆராய்ச்சிப் பிரிவுகளை உள்ளடக்கி ஏழு துறைகள் உள்ள சீர்மிகு கல்லூரியாகவும் தோராயமாக 1250 -ம் மாணவ மாணவியர்கள் பயின்று வரும் மிகவும் அறிவுத் திருக்கோவிலாகவும் இருப்பது இக்கல்லூரிக்கு சிறப்பு சேர்ப்பதாகும்.

**கற்பித்தலில் வருவதன்று படைப்பாற்றல்**
**கற்றலோடு கற்பனையை வளர்ப்பதில்**
**வருவதே படைப்பாற்றல்**

என்ற புதுக்கவிதையின் சொற்களுக்கிணங்க, இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் படைப்பாற்றல் திறனையும், அறிவியல் தொழில் நுட்பத்திறனையும், நுண்கலைத் திறன்களையும் அறிவு சார்ந்த இவ்வுலகம் அறியும் வண்ணம் ஆண்டுமலர் வெளியிடுவது பாராட்டுதலுக்குரியதாகும். திறமைமிகு உயர்கல்வியில் முப்பத்தைந்து ஆண்டகால முதல்வர், ஆற்றல்சார் ஆசிரியர்கள், அனுபவமிக்க ஆசிரியரல்லாப் பணியாளர்கள், அறிவுப்பூர்வமான மாணாக்கர்களைக் கொண்ட கல்லூரியின் ஆண்டுமலர் வெளியிடும் நிர்வாகத்திற்கும் திறன்மிகு மாணவச் செல்வங்களுக்கும் அகம் மகிழ்ந்த பாராட்டுகள்....

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர். 25/9/2023

# பெரியார் பல்கலைக்கழகம்

(தேசிய தரமதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் A++ தரச்சான்றிதழ் பெற்றது)

பெரியார் பல்கலை நகர்,
சேலம் - 636 011, தமிழ்நாடு, இந்தியா.





முனைவர் **இரா. ஜெகன்நாதன்,**
துணைவேந்தர்.




நாள் : 16.08.2023

## MESSAGE

Greetings!

It gives me great pleasure to note that the Government College of Arts and Science, Pappireddipatti is bringing out the annual magazine.

"Education is the manifestation of perfection already in man" says Swami Vivekananda. The college magazine provides a platform for every student to develop their skills. The magazine paves way for the budding students to express their thoughts, ideas, hopes, aspirations and dreams in a creative way. I am sure the college magazine is a forum used for recording events, fond memories and creative talents.

On this occasion, I convey my good wishes to the principal, faculty, students and staff of the college in their endeavours.

Best regards,

16.8.23

[R. Jagannathan]

# பெரியார் பல்கலைக்கழகம்

(தேசிய தரமதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் A++ தரச்சான்றிதழ் பெற்றது)

பெரியார் பல்கலை நகர்,
சேலம் - 636 011, தமிழ்நாடு, இந்தியா.




முனைவர் **கு.தங்கவேல்,**
பதிவாளர் (மு.கூ.பொ.)




நாள் : 14.08.2023

## வாழ்த்துரை

"மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு" எனக் குரல் கொடுத்து நம் மண்ணின் புரட்சி மாற்றத்திற்குத் தம் சிந்தனையால் வழிநடத்தி வருபவர் தந்தை பெரியார் எனும் பேராசான். அவரின் பெயர் தாங்கிய தோடு மட்டுமில்லாமல், அவர் முன்வைத்த சமூக மாற்ற கல்வி சிந்தனைகளைத் தன் கொள்கைக் குறளாகக் கொண்டுசெயல்பட்டு வருகிறது பெரியார் பல்கலைக்கழகம். ஏற்றம்மிகு இயற்கையின் அரவணைப்போடும் அர்த்த உணர்வோடும் நாட்டின் தன்னிகரில்லா மேம்பாட்டிற்கும் மொழியின் செம்மார்ந்த வளர்ச்;சிக்கும் உறுதுணையாக விளங்கும் கொங்கு நாட்டில், தவிர்க்க முடியாத ஆளுமைகளையும் தலைமைப் பண்பாளர்களையும் தாய்மடி சிறப்போடு பெற்றுத்திகழும் தருமபுரியான துவீரவரலாற்றுநாயகர்கள், தொழில், போக்குவரத்து, சுற்றுலாத்தலங்கள் எனப் பல்வேறு தனிச் சிறப்புகளுக்குப் பெயர் போனது. கல்வியெனும் பேரொளியால் ஏழை எளிய, மக்களின் அக இருளை நீக்கியதில் பெரும்பங்கு பெரியார் பல்கலைக்கழகத்திற்கும் அதன் வழி செயல்படுகின்ற அனைத்து கல்லூரிகளுக்கும் உரித்தானதாகவே அமைகிறது. இச்சிந்தனையின் பாதையிலேயே செயல்பட்டு வரும் தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரத்தில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயல்பாடுகள் உள்ளபடியே பாராட்டிற்குரியது.

2011–2012–ஆம் கல்வியாண்டில் சமூகமாற்ற சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் தனது பணியைத் தொடங்கிய பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, படிப்படியாக வளர்ச்சிப் பெற்று இன்று ஆராய்ச்சித் திறனுக்கான சிறந்த கல்விக் கூடமாகச் செயலாற்றுகையில் அந்த உயர்விற்காகத் தங்களையே பாதைகளாக மாற்றிக் கொண்ட முதல்வர், பேராசிரியர்கள், பிறகல்வியாளர்கள், எழுச்சிமிகு எண்ணம் கொண்ட மாணவர்களின் ஈடுபாட்டினைக் காண நினைக்கும்போது மனப்பரப்பெங்கும் மகிழ்ச்சியை உணர்ந்து எதிர்கால நம்பிக்கையோடு நம்மால் இருக்க முடிகிறது. சுற்றுப்புறவசதி, விரிவுப்படுத்தப்படும் பாடப்பிரிவுகள், அதிகரிக்கும் மாணவர் சேர்க்கை, கற்பித்தலுக்கான இடச்சூழல், அதிகரிக்கும் ஆராய்ச்சித் துறைகள் எனப் பன்முக தகுதிவாய்ந்த இக்கல்லூரி ஆண்டு மலரினை வெளிக்கொண்டு வருவதற்கு வாழ்த்துகளைக் கூறிக்கொண்டு மகிழ்வடைந்து துணைபுரிய விரும்புகிறேன்.

கல்விப் பாடத்திட்டத்தைத் தாண்டி உலகை, மக்களை, சூழலை, இயற்கையை வளருகின்ற மாணவர்களுக்குக் கற்பித்து, சிலருக்கு மட்டுமே என்று இருந்த பாடசாலையை எல்லோருக்கு மானதாக மாற்றிமொழி, சமூகம், பண்பாடு ஆகிய தளங்களில் யணிக்கவைப்பதற்கான முயற்சியைக் கைவிடாமல் செயலாற்ற பெரியார் பல்கலைக்கழகம் துணைநிற்கும் என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன்.

K. Thangavel (signature)
பதிவாளர்

**பதிவாளர்**
**பெரியார் பல்கலைக் கழகம்**
**சேலம்-636 011.**

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE

பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

RECOGNITION OF COLLEGE UNDER 2(F) & 12(B) OF THE UGC ACT, 1956

E-MAIL : prucaspappireddipatti@gmail.com    Phone : 04346 - 246212.



முனைவர் **வே. அன்பரசி**

முதல்வர்




நாள் : 27.09.2023

## வாழ்த்துரை

சீர்திருத்த கொள்கையாளர், செம்மைமாந்தர், அறக்காவலர், சமத்துவம் பேணிய செயல் வீரர், பெண்ணினம் போற்றும் பெரியாரின் பெயர் தாங்கிய பல்கலைக்கழகத்தின் உயர்கல்வி ஈனும் உறுப்புக் கல்லூரியாக, இயற்கை எழில் கொஞ்சும், உயரிய பச்சை மலைகள், நெடுந்துயர்ந்த பாக்கு மரங்கள், கவின் கூட்டும் வண்ணமலர் சோலைகள் சுற்றிலும் வீற்றிருக்க, 2011 - 2012 ம் கல்வி ஆண்டில் பரிணமித்து, சிறப்பான பயில் இடமாய் சீரிய செயல்பாடுகளுடன், நாள்தோறும் வளர்ச்சிப்பெற்று, வாழ்வை வளமாக்கி, வரமாக்கி, உரமிட்டு, செழித்தோங்கி பீடு நடை போடும் பாப்பிரெட்டிப்பட்டி கல்லூரி 2020 - 2021 ம் கல்வி ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்டது அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக. கற்றனைத்து ஊறும் அறிவு ஊற்றினை கற்பித்து உரமூட்டும் பேராசிரியர்களும், புகப் புகப் படிப்படியாய்ப் புலமை வந்திடுவதைப் புரிந்தும், அறிந்தும், தெளிந்தும், உணர்ந்தும் பயிலும் மாணவக் கண்மணிகளும், துறை மன்றங்களின் வழிகாட்டுதலால் திறன் வளர்த்து, கற்றல் திறத்தின் சுவையை சுவைத்து, மாபெரும் சபைதனில் வளர்த்தத் திறன் மலர்ந்து, மகுடம் சூடப்பெற்று, மாணாக்கர்கள் மதிப்புக்கூட்டிய மனிதர்களாய் பரிணமித்திடும் ரசவாதம் ரசனைக்கு உரியது. விளையாட்டுப் பிள்ளைகளாய், வீணே காலம் கழிக்காமல், மாலை முழுவதும் விளையாடி, வினையாற்றும் வீரர்களாய், வீறுகொண்டு வெற்றிநடை போடும் எங்கள் மாணாக்கர் திறம் பிரம்மிக்க வைப்பது, உள்ளத்தை கொள்ளைகொண்டு உவகையுடன் துள்ளல்கொள்ள வைப்பது. கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, ஆடல், பாடல், கலைத்திறன், பேச்சு, நடிப்பு, விளையாட்டு என ஆயக்கலைகள் அனைத்திலும் நுண்மான் நுழைப்புலம் பெற்று, பேர் பெற்று, உவகைப் பேறு கொள்ளச்செய்யும், எம் கல்லூரியின் திறன் சான்றாய் தீட்டப்பட்டிருக்கும், இம் முதலாம் ஆண்டு மலர், கல்லூரியின் மாண்பினை காண்போர் கருத்தினில் களிப்பு எனும் வித்தினை ஊன்றி அறம் போற்றும், மனிதம் வளர்க்கும் கல்வி நிலையத்தின் உரைக்கல்லாய் உலகினில் உயர்ந்து இலங்கட்டும் என உளமாற வாழ்த்துகின்றேன்.

முதல்வர்

## கல்லூரி ஆண்டறிக்கை (சுருக்கமாக)

சேலம் உள்ளடங்கிய தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்ட மாணவர்கள் உயர்கல்வி பயிலும் வகையில் சேலத்தை மையமாகக கொண்டு 1997 செப்டம்பர் 17-ல் பெரியார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. இந்நாள் வரை உயர்கல்வியில் பல்லாயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டும் பல்கலைக்கழக நிதி நல்கலைக்குழும் பாராட்டும் விதமாகவும் செயல்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், பொம்மிடி, கடத்தூர் பகுதிகளைச் சேர்ந்த மாணவ சமுதாயத்திற்குக் கிடைத்ததற்கு அரிதாக இருந்த உயர்கல்வி கிடைக்கும் வகையில் பாப்பிரெட்டிப்பட்டியை மையமாகக் கொண்டு பெரியார் பல்கலைக் கழகம் நான்காவது உறுப்புக் கல்லூரியாக 2011-ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக் கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்கியது. பி.ஏ (தமிழ்), பி.ஏ (ஆங்கிலம்), பி.காம், பி.எஸ்சி (கணிதம்), பி.எஸ்சி (கணினி அறிவியல்) ஆகிய ஐந்து பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்டது. 2016 - 2017 ஆம் கல்வியாண்டில் பி.எஸ்சி (இயற்பியல்) பாடப்பிரிவும் 2017-2018ஆம் கல்வியாண்டில் எம்.ஏ (தமிழ்), எம்.ஏ (ஆங்கிலம்) எம்.எஸ்சி (கணிதம்) ஆகிய மூன்று முதுநிலைப் பாடப்பிரிவுகளும் தொடங்கப்பட்டது. 2020-2021 ஆம் கல்வியாண்டில் பி.ஏ (சமூகவியல்) பாடப்பிரிவு தொடங்கப்பட்டது. 2021 - 2022 கல்வியாண்டில் எம்.எஸ்சி (கணினி அறிவியல்) எனும் முதுநிலைப் பாடப்பிரிவும் தொடங்கப்பட்டது.

2021 - 2022 ஆம் கல்வியாண்டில் (தமிழ்த்துறைத் தமிழாய்வுத்துறையாக) முனைவர் பட்டம் முழுநேரம் / பகுதிநேரம் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெறுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் 2011-ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாகத் தொடங்கப்பட்டு மாணவர்களின் நலன் கருதி 2020-ஆம் ஆண்டு முதல் அரசு கல்லூரியாக மாற்றப்பட்டது சிறப்பிற்குரியதாகும்.

இன்று 7 இளநிலைப் பாடப்பிரிவுகளும் நன்கு முதுநிலைப் பாடப்பிரிவுகளும் 1 முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்பும் செயல்பட்டு வருகின்றன. இக்கல்வியாண்டில் 1250 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். 15 நிரந்தரப் பேராசிரியர்களும் 29 கௌரவ விரிவுரையாளர்களும் 10 அலுவலகப் பணியாளர்களும் பணிபுரிவது சிறப்புக்குறியதாகும்.

## தமிழ்த்துறை

09.09.2022 அன்று கி.ஆ.பெ.விசுவாநாதம் படைப்பரங்கம் நடத்திய நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் பா.கார்த்திகேயன் அவர்கள் **கல்கியின் பொன்னியின் செல்வன்** நூலினை மதிப்புரை செய்து சிறப்புரையாற்றினார்.

14.09.2022 அன்று தந்தை பெரியார் பிறந்த நாளில் "**பெரியாரை வாசிப்போம்**" எனும் நிகழ்வில் ஆசிரியர் மாரி.கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு பெரியார் நமக்கு ஏன் தேவை என்பதனை மையப்படுத்தி சொற்பொழிவாற்றினார்.

15.09.2022 அன்று பெரியார் பல்கலைக்கழக வெள்ளி விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் 'தொண்டு செய்து பழுத்த பழம்' எனும் தலைப்பில் தெ.மதியரசி இளங்கலைத் தமிழ் இரண்டாண்டு மாணவி முதல் பரிசு பெற்றுள்ளார்.

11.02.2023 அன்று அரசு கலை கல்லூரி (தன்னாட்சி) சேலம்-7ல் நடைபெற்ற மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் 122-வது பிறந்தநாள் விழா இணைய வழி விநாடி வினா போட்டியில் தமிழ்த்துறை சார்ந்த 45 மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்று சான்றிதழ் பெற்றுள்ளனர்.

21.02.2023 உலகத்தாய்மொழி நாள்விழா தமிழ்த்துறை படைப்பரங்கத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் வே.அன்பரசி அவர்கள் கலந்துகொண்டு "**தாய்மொழி உணர்வு**" என்ற தலைப்பில் பொழிவுரை நிகழ்த்தினார்.

21.03.2023 அன்று தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாக ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. "**வாசிப்பே வாழ்க்கையின் நேசிப்பு**" என்ற தலைப்பில் அரூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் வெ.சஞ்சீவராயன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

## ஆங்கிலத்துறை

28.10.2022 அன்று சேலம் சௌடேஸ்வரி (பெண்கள்) கல்லூரியில் **(A Blend of Culture and Nostalgia)** என்ற தலைப்பில் முதுகலை இரண்டாம் ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

10.11.2022 அன்று வேலூர் **K.M.G** கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் **(English Acquisition : Hopes and impediments)** என்ற தலைப்பில் **1. S.Thavamani 2. A.Raveena 3. S.Kalaiyarasi 4. S.Premalatha** முதுகலை இரண்டாம் ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவிகள் கலந்துகொண்டனர்.

25.11.2022 அன்று ஊத்தங்கரை அதியமான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பெண்கள்) நடைபெற்ற, ஒரு நாள் தேசிய கருத்தரங்கில், இரண்டாம் ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவிகள் **1. S.Thavamani 2. A.Raveena 3. S.Kalaiyarasi** ஆகியோர் **(Literey Theory and Criticism)** என்ற தலைப்பில் கலந்துகொண்டனர்.

18.02.2023 அன்று சனிக்கிழமை ஆங்கிலத்துறையில் ஆங்கில இலக்கிய மன்றம் **(English Literary Association ELA)** துவக்க விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக அரசு கலைக் கல்லூரி, தன்னாட்சி, சேலம் - 7 ஆங்கிலத்துறைத்தலைவர் முனைவர் த.கங்காதரன் அவர்கள் வருகைப் புரிந்து மாணவர்களுக்கு சிறப்புரை ஆற்றினார். மேலும் முதல்வர் முனைவர் வே.அன்பரசி அவர்கள் தலைமை தாங்கினார். ஆங்கிலத் துறைத்தலைவர், உதவிப்பேராசிரியர், கௌரவ விரிவுரையளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## வணிகவியல் துறை

29.09.2022 அன்று வணிகவியல் துறையில் கல்லூரி முதல்வர் அவர்களின் தலைமையில் கிராம இளைஞர் முகாம் நிதியியல் கல்வி பயிற்சி நிறுவனம் மூலம் “**வங்கியின் நவீன போக்குகள்**” (Recent Trends in Bank) என்ற தலைப்பில் சிறப்பு விரிவுரை நடைபெற்றது, இந்த சிறப்பு விரிவுரையில் பாப்பிரெட்டிப்பட்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாளர் திரு.லெனின் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு நிதி மற்றும் வங்கியின் செயல்பாடுகள் குறித்து கருத்துரையாற்றினார்.

தமிழக அரசின் திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் SGBS UNNATI FOUNDATION என்ற நிறுவனத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மூன்றாம் ஆண்டு வணிகவியல் துறை மாணவர்களுக்கு UNEXT என்ற பயிற்சி மூலம் திரு. K.கோகுல் காளியப்பன் என்பவரால் 27.01.2023 அன்று முதல் 45 நாட்கள் நடைபெற்றது. Internship Training திட்டத்தின் கீழ் மூன்றாம் ஆண்டு வணிகவியல் துறை மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களுக்குச் சென்று பயிற்சிப் பெற்று அதற்கான சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

## சமூகவியல் துறை

இக்கல்லூரியில் சமூகவியல் துறை 2020-2021 ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்துறையில் 17.03.2023 அன்று M.N.ஸ்ரீனிவாஸ் மன்றத் தொடக்க விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் கோபாலகிருஷ்ணன், இணைப்பேராசிரியர், சமூகவியல் துறைத் தலைவர் (பொ) பெரியார் பல்கலைக்கழகம், சேலம். அவர்கள் கலந்துகொண்டு M.N.ஸ்ரீனிவாஸ் மன்றத்தினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் K.மாதேஸ்வரன், மூத்த கிளை மேலாளர், யூனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், கிளை அலுவலகம், பெருந்துறை, மற்றும் K.சுந்தரராமன், மூத்த கிளை மேலாளர், யூனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், கிளை அலுவலகம், தருமபுரி. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் முதல்வர் Dr.V.அன்பரசி அவர்கள் தலைமை தாங்கினார். Dr.P.செந்தில்குமார் சமூகவியல் துறைத் தலைவர் (பொ) அவர்கள் இந்நிகழ்வினை ஒருங்கிணைத்து நடத்தினார்.

## கணிதவியல் துறை

14.10.2022 அன்று கணிதத்துறையில் சீனிவாச இராமானுஜன் கணிதமன்றத்தின் துவக்கவிழா கல்லூரி முதல்வர் முனைவர் பா.கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் கணிதத்துறைத் தலைவர் முனைவர் கோ.ஐயப்பன் அவர்கள் முன்னிலையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் மாணவ மாணவிகளுக்கு வினாடி வினா போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

18.03.2023 அன்று கணிதத்துறையில் சீனிவாச இராமானுஜன் கணிதமன்றத்தின் இரண்டாம் நிகழ்வு கல்லூரி முதல்வர் முனைவர் வே.அன்பரசி அவர்கள் தலைமையில் கணிதத்துறை தலைவர் அவர்கள் முன்னிலையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மேலும் கணித மன்றத்தின் நிகழ்வுகளில் மாணவ மாணவிகள் படைப்புகள் மற்றும் விளக்கக் காட்சிகள் சமர்ப்பித்தனர். இதில் சிறப்பானப் படைப்புகள் மற்றும் விளக்கக்காட்சிகள் சமர்ப்பித்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் சிறப்பு அழைப்பாளராக முனைவர் ஜெ.பூபாலன், உதவிப்பேராசிரியர் அவர்கள் கணிதத்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிதம்பரம் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். அதன் பின்னர் மாணவ மாணவிகளுக்கு வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## இயற்பியல் துறை

14.02.2022 அன்று APJ Kalam பிறந்தநாளை முன்னிட்டு APJ Kalam Association சார்பாக கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பத்தில் அதிகமாக பயன்படுத்தக்கூடிய Basic Nano Meterials in Physics என்ற தலைப்பில் PPT Presentation காண்பிக்கப்பட்டது. பின்பு முதல்வர் முனைவர் பா.கார்த்திகேயன் அவர்கள் மாணவ மாணவியர்களிடையே கலாமின் வாழ்க்கை வரலாறு பற்றி சிறப்பாக எடுத்துரைத்தார்.

01.12.2022 அன்று Women Empowerment என்ற தலைப்பில் விழாவானது நடத்தப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வழக்கறிஞர் திருமதி A.பேரரசி, திருமதி T.லதா பாப்பிரெட்டிப்பட்டி காவல்துறை ஆய்வாளர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். பின்பு சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை என்ற தலைப்பில் ஓவியப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் T.சத்யா முதலிடம், ஐ.பூஜாமாலினி இரண்டாம் இடம் பெற்று பரிசு பெற்றனர்.

24.01.2023 அன்று குடியரசு தின விழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. சுதந்திர இந்தியாவில் எனது பங்கு என்ற தலைப்பில் கட்டுரைப்போட்டி நடைபெற்றது. அவற்றில் இயற்பியல் துறையைச் சார்ந்த இரா.பூந்தென்றல் மூன்றாம் ஆண்டு இயற்பியல், உ.சிவாபாண்டியன் இரண்டாம் ஆண்டு இயற்பியல், ச.பூஜாமாலினி முதலாம் ஆண்டு இயற்பியல் ஆகியோர் முதல் மூன்று இடம் பிடித்து பரிசுகளை பெற்றனர்.

28.02.2023 அன்று இயற்பியல் துறையின் சார்பாக தேசிய அறிவியல் தினமானது கொண்டாடப்பட்டது. அறிவியல் கண்காட்சியும் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து அறிவியல் சார்ந்த கருத்துக்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்து முனைவர் S.அரவிந்தன் உதவிப்பேராசியர், சிக்கன்னா கலை அறிவியல் கல்லூரி, திருப்பூர் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அறிவியல் கண்காட்சியில் கலந்துகொண்டவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

## கணினி அறிவியல் துறை

ஜுன் 2022 அன்று கணினி அறிவியல் துறை சார்பில் மென்பொருள் உருவாக்கம் மற்றும் பயன்பாடு குறித்து மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இதில் மாணவர்களின் சுயவிவரம் தகவல் சேகரிப்பு மற்றும் பருவத்தேர்வுகள் சம்மந்தப்பட்ட கோப்புகள்

பராமரிப்பது பற்றி மாணவர் சக்திவேல் விளக்கினார்.

பெரியார் பல்கலைக்கழகத்தின் 25-வது ஆண்டு வெள்ளி விழாவையொட்டி செப்டம்பர் 2022 அன்று அறிஞர் அண்ணாவின் தீ பரவட்டும் என்னும் தலைப்பில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் கணினி அறிவியல் இரண்டாம் ஆண்டு மாணவர் கோகுல் தருமபுரி மாவட்ட அளவில் இரண்டாம் இடம் பெற்றார்.

நமது கல்லூரியில் தேர்தல் கல்வியறிவுக்குழுவின் சார்பில் அக்டோர் 2023-ம் மாதம் தேசியவாக்காளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற போஸ்டர் வடிவமைப்பு போட்டியில் கணினி அறிவியல் துறை முதலாமாண்டு மாணவி இரண்டாம் இடம் பெற்றார்.

17.03.2023 அன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி அறிவியல் துறையின் சார்பாக ஒருநாள் சிறப்பு சொற்பொழிவு “இயந்திர கற்றல்” (Machine Learning) என்ற தலைப்பில் முனைவர் P.சீனிவாசன் Vellore Institute of Technology VIT அவர்கள் பங்குபெற்று மாணவ மாணவியர்களிடையே கருத்துக்களை எடுத்துரைத்தார்.

## உடற்கல்வித்துறை

தருமபுரி மாவட்ட விடுதி மாணவர்களுக்கென தருமபுரி விளையாட்டரங்கில் நடைபெற்ற நீளம் தாண்டுதலில் பெ.ஸ்ரீரங்கன் இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவன் இரண்டாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெருமைச் சேர்த்துள்ளார்.

16.02.2023 தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற தமிழர்களின் கலையான சிலம்பாட்டப் போட்டியில் இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு மாணவன் மு.முத்துசாமி மூன்றாம் இடத்தைப் பெற்று சான்றிதழ் பெற்றுள்ளார்.

18.02.2023 அன்று தருமபுரி விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பைக்கான தடகளப் போட்டியில் உயரம் தாண்டுதல் பெண்கள் பிரிவில் வெ.வசிதா இரண்டாம் இடம் பிடித்து ரூ.2000 பரிசுத் தொகையையும், ம.ரேவதி இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு ஓட்டப் பந்தயத்தில் மூன்றாம் இடம் பெற்று ரூ.1000 பரிசுத்தொகையையும் பெற்று சாதனைப் படைத்துள்ளனர்.

வேலூர் மாவட்டம், காட்பாடியில் தமிழ்நாடு பாரம்பரிய சிலம்ப சங்கம் மற்றும் தமிழ்நாடு கலைத்தாய் அனைத்து நாட்டுப்புற கலைஞர்கள் மாநில சங்கம் சார்பில் மாநில

அளவிலான சிலம்பாட்ட சாம்பியன்சிப் போட்டியில் அக்டோபர் - 2022, 29, 30-ம் தேதிகளில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவன் முத்தரசன் ஒற்றை கம்பு சீனியர் பிரிவில் மூன்றாம் இடமும், சசிகுமார் வேல்கம்பு பிரிவில் மூன்றாம் இடம் பெற்று இக்கல்லூரிக்குப் பெருமைச் சேர்த்தனர்.

பிப்ரவரி 2023-ல் தருமபுரியில் நடைபெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான முதல்வர் கோப்பை விளையாட்டுப்போட்டியில் சிலம்பம் ஆட்டத்தில் தனிநபர் போட்டியில் நமது கல்லூரியின் கணினி அறிவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவர் முத்தரசன் மாவட்ட அளவில் அலங்கார வீச்சுப்போட்யில் இரண்டாமிடம், தமிழ்த்துறையின் இரண்டாமாண்டு மாணவர் முத்துசாமி ஒற்றைக் கம்பு போட்டியில் மூன்றாமிடம் பெற்று கல்லூரிக்குப் பெருமைச் சேர்த்தனர்.

பிப்ரவரி 2023-ல் முதலமைச்சர் கோப்பைக்கான தருமபுரி மாவட்ட அளவிலான கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான தடகளப் போட்டிகளில் பங்கேற்ற நமது கல்லூரி மாணக்கர்களில் இயற்பியல் துறை மூன்றாமாண்டு மாணவர் மணிகண்டன் உயரம் தாண்டுதல் பிரிவில் முதலிடம் பெற்று சாதனைப் புரிந்தார். பெண்களுக்கான உயரம் தாண்டுதல் பிரிவில் தமிழ்த்துறை இரண்டாமாண்டு மாணவி வசிதா இரண்டாமிடமும், 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தமிழ்த்துறை இரண்டாமாண்டு மாணவி ரேவதி மூன்றாமிடமும் பெற்று இக்கல்லூரிக்குப் பெருமைச் சேர்த்தனர்.

பிப்ரவரி 2023 முதலமைச்சர் கோப்பைக்கான கடற்கரை கைப்பந்து போட்டிகளில் கடலூர் மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியின் மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவர் வெங்கடேசன் மற்றும் முதலாமாண்டு ஆங்கிலத் துறை மாணவர் லட்சுமணன் ஆகியோர் பங்குபெற்று பெருமைச் சேர்த்துள்ளனர்.

கல்லூரியில் பயிலும் மாணக்கர்கள் மற்றும் அனைத்துத் துறைச் சார்ந்த ஆசிரியர்கள் பங்கேற்ற விளையாட்டுப்போட்டிகள் தனித்தனியாக நடத்தப்பட்டது. பல்வேறு பிரிவுகளில் பங்கேற்று வெற்றிபெற்றவர்களுக்கு 05.05.2023 அன்று நடைபெற்ற விளையாட்டு விழாவில் கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## நூலகம்

நமது கல்லூரி நூலகத்துறை சார்பாக 23.02.2022 அன்று அரசு தேர்வுகளுக்கு மாணவர்கள் தயாராவது எப்படி என்கின்ற தலைப்பில் பயிற்சி பட்டறை நடைபெற்றது,

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திரு.பூ.கொ.சரவணன் உதவி ஆணையர் சுங்கத்துறை சென்னை அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு உரை நிகழ்த்தினார்.

17.02.2023 அன்று கல்லூரி நூலகம் சார்பில் மாணவ மாணவியர்களிடையே மக்களவை தாக்கல் செய்த 2023 - 2024 ஆம் நிதியாண்டிற்கான நிதி அறிக்கை குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது, நமது கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபெற்று சிறப்பித்தனர்.

பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி 12.04.2022 அன்று சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. அம்பேத்கரின் 132-வது பிறந்தநாளையொட்டி நூலகம் சார்பில் சிறப்பு பட்டிமன்றம் கல்லூரி முதல்வர் பா.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது.

சட்டமேதை அம்பேத்கர் பெரிதும் பங்காற்றியது இந்தியாவின் சட்ட அமைப்பிற்காக, அல்லது சமூக வளர்ச்சிக்காக என்ற தலைப்பில் கல்லூரி மாணவ, மாணவயர் தங்களது கருத்துக்களைப் பட்டிமன்றத்தில் எடுத்துரைத்தனர்.

கல்லூரி பேராசிரியர் ந.ரமேஷ், த.அருண்நேரு, இ.சுஜிதா ஆகியோர் நடுவர்களாக பங்கேற்று சிறப்புரை வழங்கினர்.

பட்டிமன்றத்தில் சிறப்பாக உரையாற்றிய மாணவர்கள் அ.பிரின்சி, மு.இந்தியா, த.புத்தகப்பிரியன், மு.நித்யா, பாரத் ஆகியோருக்கு டிஎன்பிஎஸ்சி பொது தேர்வுக்கான புத்தகங்கள், பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. இதில் நூலகர் சி. கல்யாணி, பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

## நாட்டு நலப்பணித்திட்டம் (NSS)

கடந்த ஐந்தாண்டுகளில் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக நான்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 200 மாணவ மாணவியர்கள் பயனடைந்தனர். மேலும் தமிழ்நாடு அளவிலான நாட்டு நலப்பணித்திட்டம் சாகச முகாமில் 13.07.2022 - 16.07.2022 வரை ஏற்காட்டில் நமது கல்லூரியின் சார்பில் நான்கு மாணவர்கள் கலந்துகொண்டு சான்றிதழ்கள் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக நடத்தப்பட்ட இரத்த தான முகாமில் 80 மாணவ

மாணவியர்கள் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர்.

“நமது குப்பை நமது பொறுப்பு” என்ற தலைப்பில் நமது மாணவ மாணவியர்கள் பேரணி சென்று மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அதில் நெகிழி ஒழிப்பின் அவசியத்தை எடுத்துரைத்தனர்.

இந்த ஐந்தாண்டுகளில் சுமார் 300 மரக்கன்றுகள் நமது கல்லூரியின் வளாகத்திற்கு உட்புறமும் வெளிப்புறமும் நாட்டு நலப்பணித்திட்டம் மாணவ மாணவியர்களால் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## **இளைஞர் செஞ்சிலுவை சங்கம்** (YRC)

25.08.2022 அன்று நமது கல்லூரிக் கலையரங்கத்தில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் தருமபுரி மருத்துவக் கல்லூரி இரத்த வங்கி இணைந்து நடத்திய இரத்ததான முகாமில் 53 அலகு இரத்ததானம் மாணவர்கள் வழங்கினர்.

17.10.2022 அன்று முன்னாள் ஜனாதிபதி Dr.A.P.J.அப்துல்கலாமின் பிறந்தநாளை இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாடும் வகையில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

08, 09, 10, 02 - 2023 ஆகிய மூன்று நாட்கள் சேலம் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மண்டல அளவிலான YRC திட்ட அலுவலர் & தன்னார்வ தொண்டர்களுக்கான பயிற்சி முகாமில் YRC திட்ட அலுவலர் முனைவர் இ.சுஜிதா மற்றும் இரண்டு மாணவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

20.03.2023 அன்று நமது கல்லூரி கலையரங்கத்தில் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் தர்மபுரி மருத்துவக் கல்லூரி இரத்த வங்கி இணைந்து நடத்திய இரத்ததான முகாமில் 55 அலகு இரத்ததானம் வழங்கப்பட்டது.

29.03.2023 அன்று இ.ஆர்.கே கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மண்டல அளவிலான YRC திட்ட அலுவலர் & தன்னார்வ தொண்டர்களுக்கான பயிற்சி முகாமில் YRC திட்ட அலுவலர் முனைவர் இ.சுஜிதா மற்றும் இரண்டு மாணவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

## **செஞ்சுருள் சங்கம்** (RRC)

கல்லூரியின் செஞ்சுருள் சங்கம் சார்பில் பிப்ரவரி-2023 மாதத்தில் நடைபெற்ற

இரத்ததான முகாமில் 60 மாணவர்கள் 60 அலகுகள் இரத்த தானம் செய்து சேவை ஆற்றினர். மகளிர்க்கான சிறப்பு மருத்துவ முகாம் செவ்வனே நடந்தேறியது. செஞ்சுருள் சங்கம் மற்றும் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் இணைந்து நடத்திய இணையவழி வினாடி வினா போட்டியில் எம் கல்லூரி மாணாக்கர்கள் ஏழு சுற்றுகளில் வெற்றி பெற்று ரூ.16,000 ரொக்கப்பரிசு பெற்றனர். மீம்ஸ் போட்டிகளில் முதலிடத்தினை எம்,புகழேந்தி, கணிதத்துறை, திருப்பதி ஆங்கிலத்துறை மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்றனர்.

## 75-வது குடியரசு தின அமுதப்பெருவிழா

26.01.2023 அன்று கல்லூரியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் முதுகலை இரண்டாமாண்டு மு.வல்லரசு 'சுதந்திர இந்தியாவில் இளைஞர்களின் பங்கு' எனும் தலைப்பில் உரையாற்றி முதல் பரிசை பெற்றுள்ளார்.

75-வது இந்திய சுதந்திர தின கொண்டாட்டம் அமுதப்பெருவிழாவாக ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்வுகளால் கொண்டாடப்பட்டு வருகிறது. கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போடி, கவிதைப்போட்டி, பாட்டுப்போட்டி முதலானப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

## வேலை வாய்ப்பு நிகழ்வுகள்

பெரியார் பல்கலைக் கழகம் மூலமாக 13.03.2022 அன்று SBI LIFE INSURANCE நிறுவனத்திற்கு DEVELOPMENT MANAGER என்ற பதவிக்கு நேர்முகத்தேர்வு நடைபெற்றது. இந்த தேர்வில் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

நாமக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் நாமக்கல் மாவட்ட தொழிற்நெறி வழிகாட்டு மையம் இணைந்து 10.03.2022 அன்று நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் படித்து முடித்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

தருமபுரி மாவட்ட நிர்வாகம் மற்றும் தருமபுரி மாவட்ட தொழில்நெறி வழிகாட்டு மையம் மூலமாக 24.03.2022 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

சேலம் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு தொழிற்நெறி வழிகாட்டு மையம் வாயிலாக 26.11.2022 அன்று நடந்த வேலைவாய்ப்பு முகாமில் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் மூன்றாம் ஆண்டு வணிகவியல் துறையில் பயிலும் P.பவித்ரா என்ற மாணவி GEEKAY HUMAN RESOURCES (P) Ltd., என்ற நிறுவனம்

நடத்திய நேர்முக தேர்வில் கலந்துகொண்டு தர மேற்பார்வையாளர் (Quality Supervisor) என்ற பணிக்கு தேர்வாகிப் பணி நியமன ஆணை பெற்றுள்ளார்.

## பெற்றோர் ஆசிரியர் கழகம்

பெற்றோர் ஆசிரியர் கழகம் 2021-ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

## மகளிர் மேம்பாட்டுக் குழு

2022 - 2023 - ஆம் கல்வியாண்டில் Women Empowerment Cell- சார்பாக பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நவம்பர் 25 சர்வதேச தினமாக அனுசரிக்கும் வகையில் கல்லூரியில் விழிப்புணர்வு நடத்தப்பட்டன.

30.11.2022 அன்று காலை 11.00 மணியளவில் பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம் தருமபுரி சார்பாக செ.மலர்க்கொடி, து.ரம்யா, ம.ராணி மற்றும் சாந்தி அவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு உரை நிகழ்த்தினர். பெண்கள் தங்களது குடும்பம், சமுதாயம், பணிபுரியும் இடம் மற்றும் பொது இடம் என எங்கு பாதிக்கப்பட்டாலும் சேவை மையத்தை அணுகலாம் என்றும் கூறினர்.

30.11.2022 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் T.S. லதா காவல் ஆய்வாளர், பாப்பிரெட்டிப்பட்டி அவர்கள் மாணவ மாணவிகளிடையே பெண் பாதுகாப்பு குறித்துப் பேசினார்.

01.12.2022 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் பேரரசி வழக்கறிஞர் பாப்பிரெட்டிப்பட்டி அவர்கள் சட்டம் சார்ந்த கருத்துக்களையும் எடுத்துரைத்தார். மாணவ மாணவியர்களிடையே பேச்சுப்போட்டியும் நடத்தப்பட்டன. சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தலைப்பில் இப்போட்டியில் அனைத்து துறை சார்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். அவற்றில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## போதைப் பொருள் தடுப்புக் குழு

தமிழக அரசின் மிக முக்கிய திட்டமான போதைப்பொருள் இல்லா தமிழகத்தை மாற்ற வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக நமது கல்லூரியில்

11.08.2022 அன்று போதைப்பொருள் (ம) அதனால் ஏற்படும் தீமைகள் குறித்தும் மாபெரும் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் ப,கார்த்திகேயன் அவர்களும் T.S. இலதா (காவல் ஆய்வாளர்) பாப்பிரெட்டிப்பட்டி அவர்களும் கலந்துகொண்டனர். நிகழ்வினை ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. ஜெயராமன் கணிதவியல் உதவி பேராசிரியர் ஒருங்கிணைத்தார்.

28.02.2022 அன்று போதைப்பொருள் தடுப்பு (ம) பாதிப்பு பற்றிய விழிப்புணர்வு நாடகம் பொதுமக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் விதமாக மாணவர்களால் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் சுமார் 1150 மாணவர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

## கல்வி உதவித்தொகை

நமது கல்லூரியில் 2022 - 2023 ஆம் கல்வியாண்டில் மத்திய அரசின் central sector scholarship மூலமாக 41 மாணவர்கள் ஒருவர் வீதம் 12,500 ரூபாய் பெற்றுள்ளனர். தமிழ்நாடு அரசின் மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை தலா 6000 ரூபாய் 1140 மாணவ மாணவியர்கள் பெற்று பயனடைந்திருக்கின்றனர் என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறோம். இக்கல்வி உதவித்தொகை பெறுவதற்கு முழு முயற்சி எடுத்த நம் கல்லூரி உதவித்தொகை ஒருங்கிணைப்பாளர் நூலகர் முனைவர் கி.ச.கல்யாணி, இளநிலை உதவியாளர். ஜெயராணி ஆகிய இருவரின் முயற்சியால் மாணவர்கள் பயனடைந்தது சிறப்புக்குறியதாகும்.

## கல்லூரி மாணவ - மாணவியர் விடுதி

மிகவும் பிற்படுத்தப்பட்ட அரசு நல மாணவ விடுதி செயல்பட்டுவருகின்றது. விடுதியின் உறுப்பினர்களாக முனைவர் பொ. செந்தில்குமார், சமூகவியல் துறைத்தலைவர் (பொ), முனைவர் வே.பசுபதி வணிகவியல் துறைத்தலைவர் அவர்கள் பொருப்பாளர்களாகவும், மிகப்பிற்படுத்தப்பட்ட அரசு நல மாணவியர் விடுதியின் உறுப்பினர்களாக முனைவர் வெ.சங்கீதா கணினி அறிவியல் துறைத்தலைவர், முனைவர் அ.சுபா உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை அவர்களும் பொறுப்பாளர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். தருமபுரியைச் சுற்றி அமைந்துள்ள பிற மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் 100 பேரும் மாணவிகள் 100 பேரும் விடுதியில் தங்கி பயின்று வருகின்றனர்.

## சிற்றுண்டிச் சாலை

மாணவர்களின் நலன் கருதி நமது கல்லூரியில் மகளிர் சுய உதவிக்குழு மூலம் சிற்றுண்டிச் சாலை நடத்தப்பட்டு வருகின்றது

## தமிழாய்வுத்துறை









## ஆங்கிலத்துறை










## கணிதவியல் துறை









## இயற்பியல் துறை










## வணிகவியல் துறை









## கணினி அறிவியல் துறை









# சமூகவியல் துறை









# நூலகம்









## நாட்டு நலப்பணித் திட்டம்









## உடற்கல்வித் துறை









# முப்பெரும் விழா



முதல்வர்



சிறப்பு விருந்தினர் திரு. இரா சுந்தரம்
(நிர்வாக இயக்குநர், சேலம் ஏரோபார்க் நிறுவனங்கள்)



சிறப்பு விருந்தினர் திரு. செ.புகழேந்தி கணேஷ்
(காவல் துணைக் கண்காணிப்பாளர், அரூர் உட்கோட்டம்)



மரம் நடுதல்



தமிழாய்வுத்துறை



ஆங்கிலத்துறை



கணிதவியல் துறை



கணினி அறிவியல் துறை

## அன்னை

அன்னை எனப்படுவர் யாரெனில் யாவர்க்கும்
நன்மையே எண்ணுபவர் - இது என் மொழி
தாய்..... தன் மகவிற்கான வாழ்வினைத்
தகவமைத்து தருபவள் தாய்!!!
தான் ஈன்ற மகவை,
தன்னின் உருவாய்,
தன்னுடைய தரணியாய்,
தகவமைத்து கொள்பவள் தாய்!!!
தாய் தியாகத் திருவுரு!!!
மாண்புடைய மனித குலம் மட்டுமின்றி,
தாய்மைப் பேற்றினை பெற்றிட்ட
தரணிவாழ் உயிரினங்கள் யாவுமே
தன்னிகரில்லா தியாகத் திருவுருக்கள்! அன்னை....
அன்னை அன்பின் மெய்ப்பாடு.
அன்னை ஆனந்தத்தின் மெய்ப்பாடு.
அன்னை அறிவின் மெய்ப்பாடு.
அன்னை அரணின் மெய்ப்பாடு.
அன்னை கருணையின் மெய்ப்பாடு.
அன்னை கண்ணியத்தின் மெய்ப்பாடு.
அன்னை ஆசானின் மெய்ப்பாடு.
அன்னை நேசத்தின் மெய்ப்பாடு.
அன்னை ஆக்கத்தின் மெய்ப்பாடு.
அன்னை ஊக்கத்தின் மெய்ப்பாடு.
ஆக அகிலத்தினை ஆட்சி செய்து
மாட்சிமையும், மாண்பும் ஓங்கி
அகிலம் வாழ் மானுடம் அழகாய் வாழ
அனைத்திலும் நன்மை மட்டுமே நாடும்
தன்னலமற்ற தகைசால் பண்புகளுடன்
பரிணமித்து நடமாடும் பண்பாளர்கள்
பாரில் அகம்குளிர்விக்கும் அன்னையரே !!!! ஆக
அன்னை எனப்படுபவர் யாரெனில் யாவர்க்கும்
நன்மையே எண்ணுபவர்-எனும் என் மொழி ஏற்புடையதுதானே!!!

முனைவர். **வே.அன்பரசி**
முதல்வர்

## குறை கூறுதல்

குயிலைப் பார்த்து மனிதன்
சொன்னான், நீ மட்டும் கருப்பா
இல்லனா ரொம்ப நல்லாயிருக்கும் என்று...
கடலைப் பார்த்து கூறினான்
உப்பு மட்டும் இல்லனா உன் மதிப்பே தனி என்று...
அடுத்து ரோஜாவைப் பார்த்து
சொன்னானாம் முட்கள் இல்லனா நீ
இன்னும் சிறப்பு என்று! - குயில்
இவை மூன்றும் சேர்ந்து
மனிதனிடம் சொன்னதாம்
குறைகளை மட்டுமே உன்னிடம் இல்லனா நீ
எங்கேயோ போயிருப்பாய் என்று!

## சுதந்திர தினம்

இரவு பயணத்தில் பேருந்திலிருந்து
இறங்குகையில் நான்கு ஆண்கள்
பின் தொடரும் போது
மீதி இருக்கிற நேரத்தில்
பயமின்றி அவள் வீட்டை
அடைந்தாலென்றால்
அன்று கொண்டாடுகிறோம்
சுதந்திரதினத்தை ...

## அம்மா

மலடி என்று பட்டம் சூட்டி
அழைத்தனர் ஊரார் அவளை
வாசலில் முன் வந்து அழைத்தான்
பிச்சைக்காரன் அம்மா என்று...

முனைவர் **மு.சுதா**
கௌரவ விரிவுரையாளர்
தமிழாய்வுத்துறை

## மூன்றெழுத்து கவிதை

அம்மா என்ற மூன்றெழுத்தில்
தாய்மை என்பதும் மூன்றெழுத்து
அப்பா என்ற மூன்றெழுத்தில்
பாசம் என்பதும் மூன்றெழுத்து
மகள் என்ற மூன்றெழுத்தில்
அன்பு என்பதும் மூன்றெழுத்து
மகன் என்ற மூன்றெழுத்தில்
பண்பு என்பதும் மூன்றெழுத்து
அக்கா என்ற மூன்றெழுத்தில்
அறிவு என்பதும் மூன்றெழுத்து
அண்ணி என்ற மூன்றெழுத்தில்
நட்பு என்பதும் மூன்றெழுத்து
காதலி என்ற மூன்றெழுத்தில்
காதல் என்பதும் மூன்றெழுத்து
மனைவி என்ற மூன்றெழுத்தில்
உயிர் என்பதும் மூன்றெழுத்து
மாமன் என்ற மூன்றெழுத்தில்
ஆசை என்பதும் மூன்றெழுத்து
அத்தை என்ற மூன்றெழுத்தில்
பார்வை என்பதும் மூன்றெழுத்து
அன்னை என்ற மூன்றெழுத்தில்
பேரன் என்பதும் மூன்றெழுத்து
பெருமை என்ற மூன்றெழுத்தில்
பேத்தி என்பதும் மூன்றெழுத்து
இவை அனைத்தும் அடங்கிய
உறவு என்ற மூன்றெழுத்தில்
இவை எல்லாம் இணைக்கும்
உலகு என்ற மூன்றெழுத்தில்
தமிழ் எங்கும் புகழ் கொண்டு வாழ்கிறது
இவற்றில் எந்த எந்த
மூன்றெழுத்தில் நீவிர் முதல்....

**கோ. கிருஷ்ணன்**
தமிழாய்வுத்துறை, கௌரவவிரிவுரையாளர்.

**நீர்மாசுபாடு**

அகிலமெங்கும் உன் அடிமை
அழகே உனைக் காப்பது மானுட கடமை...
அவனென்றும், இவனென்றும், நீ பேதமேதும் பார்ப்பதில்லை.....
அனுதினமும் உனை யாரும் அணைக்காமல் போவதில்லை......
பாவங்கள் தீர்ப்பதும், புல்லினம் சிரிப்பதும் உன்னாலே....
பருவம் தான் தவறி பாவை நீ
வந்தால் பாரின் அழகும் கெட்டுவிடும் உன்னாலே....
நீல வண்ணச் சேலை கட்டி,
கண்ணிரண்டில் மின்னல் வெட்டி,
சட்டென சிரிக்காமல் பட்டென சிரித்து
கார்முகில் கூந்தல் விரித்து,
நெஞ்சமெல்லாம் ஆர்ப்பரிக்க,
நஞ்சை, புஞ்சை யெல்லாம் தான் சிலிர்க்க...
தரணியின் மானம் காக்க
மேலாடையின்றி,
நீராடை அணிந்து,
வானோடை வழி பிடித்து,
இப்பூவுலகிற்கு பொன்னாடை போர்த்திட்ட பேரழகே...
அங்கங்கு அணை போட்டு
உனை எவன் தடுத்தாலும்...
எங்கெங்கு சென்றாலும் எழில் கொஞ்சும் பேரழகை பஞ்சமின்றி,
கொட்டி விட்டு செல்கிறாய் நீ...
கட்டுக்குள் இருக்கும் வரை காதலி போல் இருக்கிறாய்...
சற்று கவனக்குறைவாய் இருந்துவிட்டால் கட்டிய மனைவியைப் போல்
கரையைக் கடந்து விடுகிறாய்...
வருகின்ற வழியெல்லாம்
வளம் கொடுத்து, வாழ்வு கொடுத்து
வனப்போடு வருகின்றாய்...
வருகின்ற உன்னை வாழ்த்தவும் செய்கின்றனர் சிலர்...

வசை பாடவும் செய்கின்றனர் பலர்
ஊழல் செய்து பிழைப்பவனுக்கும் ஊரை ஏய்த்து பிழைப்பவனுக்கும்
பணக்கார முதலைகளுக்கும்
அவர்களின் மாசை நீக்கி மாசடைந்து விடுகிறாய்....
உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்தவனுக்கும்
பாட்டாளி வர்க்கத்திற்கும்
நீ மட்டுமே சமநீதி தருகிறாய்...
தீண்டாமை, தீட்டு என்று இன்றும் கட்டுக்குள் இருக்கின்ற நீ....
எப்போது இந்த மாசுபாட்டிலிருந்து வெளியேறப் போகிறாய்???
பணக்கார பெருமுதலைகளின் கைகளைத் தழுவும் புனித நீர்
பாட்டாளி வர்க்கத்தின் கால்களைத் தொடும்பொழுது இவ்வுலகில்
நீர் மாசுபாடு நீர்த்துப்போகும்...

**த.கோகுலகண்ணன்,**
கௌரவ விரிவுரையாளர், ஆங்கிலத்துறை.

## வேதியியலின் பார்வையில் இயற்கை!

மேகம் காற்றின் வழியே செல்ல
குளிர்தலே - மழை
மேகம் நீர் கோர்த்த வித்தையோ
அது - வேதியியல்
காற்று இயற்கை வழியில் நம்மை
தொட்டால் - தென்றல்!
காற்று நம்மைத் தொட்டதால் நுரையீரல்
இயக்கம் - வேதியியல்!
உனக்கும் - எனக்கும் தெரியாத பலவிதமான
உடலியல் வினைகள் - அது
மிகப்பெரிய உன்னதமான வேதியியல்
பசியும் தாகமும் உடலில் தோன்றும்
உணர்வுகள் அதை - உருவாக்கும்
நீக்குவதும் வேதியியல் வினைகள்
இதயம் துடிப்பது எதற்காக?
இதயம் துடிப்பது எதற்காக!

குருதியை கொண்டு உடலை சீராக்குமே அதற்காக
வினைவேதத்தால்! வேதிவினையின் வேகத்தால்
காற்றும் கார்பன் - டை- ஆக்ஸைடாகும்!
உணவும் கார்போஹைட்ரேட்டாகும்! இம்மாற்ற
நிகழ்வுகள் - வேதியியல்
கேட்காமல் - பசிப்பதும், நினைக்காமல் உறங்குவதும்
சொல்லாமல் நடிப்பதும், ஆகிய அனைத்துமே
வினைகளின் வெளிப்பாடே
நடைமுறைகள் அனைத்தும் இயற்கையாகவே
நடந்தாலும் செயல்முறைகள் அனைத்தும் வேதியியலாகப் - பார்ப்பதே
இந்த ‘வேதியியலாளர்களின்’ விளையாட்டு

தா.மா.முனிராஜ்<br>கௌரவ விரிவுரையாளர்

## பெண்ணின் சாதனை...

பெண்ணே நீ!!!
கலங்குவதற்காக பிறக்கவில்லை!!!
கதிரவன்போல் ஒளிவீசுவதற்காக
பிறந்துள்ளாய்!!!
மற்றவர்கள் நிழலில்,
நீ வாழ பிறக்கவில்லை!!!
உன் நிழலில் மற்றவர்கள்
வாழ பிறந்துள்ளாய்!!!
ஓர் ஆணுக்குப் பின்னால்
பெண் என்பதற்காகவா
நீ பிறந்துள்ளாய்? இல்லை...
ஓர் ஆணுக்கு நிகரானவள்
தான் பெண் என்பதற்காக
பிறந்துள்ளாய் என நினைவில் கொள்...

கோ.சோபியா,<br>இரண்டாமாண்டு கணினி அறிவியல்

## ஏவுகணை நாயகன்

ஏவுகணை நாயகனே! காலமும்
சலாம் போடும் கலாம் ஐயா!
வீசும் காற்று உன் புகழைப் பேசும்!
பெருமை கொள்கிறது நம்முடைய தேசம்
ஒளியாக உமது பொன்மொழிகள்
உளியாக உள்ளத்தைச் செதுக்கும்
இராமேஸ்வரத்தின் முத்தே! தேச
மக்களின் சொத்து!
இளைஞர்களின் எழுச்சியே!
உள்ளம் ஒன்று இருக்கிறது அதில்
உந்தன் பெயரை ஒலிக்கின்றது
கலாம்!! சலாம்!!
கூறினீர்களே எங்களை கனவு
காண, இன்று நாங்கள் கனவு
காண்கிறோம் உங்களைப் போல
ஒரு தலைவருக்காக
விஞ்ஞான புறா அக்னிச் சிறகோடு
பறக்கிறதே! உந்தன் மனித இதயம்
கண்டு மேகமும் மெய் சிலிர்க்கிறதே!
உயரம் தொட்டும் உலகம் சுற்றியும்
எளிமை மாறவில்லை!
உங்களைப் போல இவ் உலகில் யாருமில்லை!
விண்ணை அளக்கலாம்
மண்ணை நேசிக்கலாம்

## அக்னி நாயகன்

அறிவியலை கைக்குள்
அடக்கலாம் அன்பால்
அனைவரையும் ஈர்க்கலாம்
அதுதான் அப்துல்கலாம்
சிறகின்றி தவித்த பாரத

நாட்டிற்கு உங்களின் அக்னி
சிறகுகள் தந்தீர்! இருளில்
இருந்த இளைஞர்களின் வாழ்வில்
எழுச்சி தீபங்கள் தந்தீர்!
கனவு காணுங்கள் என்று கூறிய
கதாநாயகனே என்றும் எங்கள்
இதய சிம்மாசனத்தில் பெரிய
இடம் உண்டு
அக்டோபர் 15 விஞ்ஞான
உலகிற்கு வந்த வரப்பிரசாதம்!
இராமேஸ்வரத்தில் பிறந்து
விஸ்வரூபம் எடுத்த மாமனிதர்!
உங்களின் புகழைப் போற்றிப் பாட
என் கவிதை வரிகளே பற்றவில்லை

**கோ.இனியகவி**
இளமறிவியல்
கணிதவியல் முதலாம் ஆண்டு

**ஆசிரியர்**

சிலை வடிக்கும் சிற்பி கூட
- ஆச்சர்யம் கொள்வார்!
நொடிக்கு நொடி இவர்கள் என்னை
- செதுக்கியதைக் கண்டு!
இவர்க்கு கற்றுக் கொடுத்தது பாடம்
- அல்ல வாழ்க்கை!
பாடம் கற்றுக் கொடுத்ததால்
- ஆசிரியர்களாகத் தோன்றினர்!
பாடத்துடன் வாழ்க்கையையும்
- உணர்த்தியதால் அன்னையாகிறார்கள்!
நாங்கள் வெற்றி பெறுவதில்
- இவர்களும் பங்காற்றுகிறார்கள்!
பாடத்துடன் வாழ்க்கையையும்
- உணர்த்தியதால் அன்னையாகிறார்கள்!
நாங்கள் வெற்றி பெறுவதில்

- இவர்களும் பங்காற்றுகிறார்கள்!
ஆசிரியர்களாக அல்ல சக தோழன் (ம) தோழிகளாக
- நம்மோடே பயணிக்கிறார்கள்!
என்றும் எங்களின் நினைவுகளுடனே தொடர்கிறது!
உங்கள் பயணம்!
நன்றி!!!

**சி.ஜெயந்தி**
இளங்கலை சமூகவியல், இரண்டாமாண்டு

## ஒற்றுமை

அன்பு என்ற ஒன்றிலே
அவனி அடங்கிப் போகுது
ஆசை அதிகம் வளர்வதால்
அன்புக் குறுகி போகுது
இதுவே போதும் என்றால்
இதய பாரம் இறங்குது
ஈவதென்று நினைப்பதால்
ஈயும் உள்ளம் பெருகுது
உயிர்கள் எல்லாம் ஒன்றுதான்
என்றால் உலகம் செழிக்குது
ஊழல் எல்லாம் தொலையுது
ஊருக்குழைக்க நினைப்பதால்
எதுவும் எனது என்பதால்
எதிர்ப்பு வந்து மிரட்டுது
ஏதும் வேண்டாம் என்றாலோ
எல்லாம் வந்து குவியுது
ஐயம் கொண்டு செய்த வேலை
அரை குறையாய் முடியுது
ஒன்றுபட்டால் எல்லாமே
ஒழுங்காய் உடனே நடக்குது
ஓடி ஆடி உழைப்பதால்
வாழ்வு உயர்வு அடையுது

**அ.சௌமியா**
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

**தன்னம்பிக்கை கவிதை**

விழுவதும் எழுவதும்
வாழ்க்கையின் எதார்த்தம்
விழுந்தால் வருந்தாதே
மண்ணில் விதையாய்
விருட்சம் பெரு!
எழுந்தால் பயம் கொள்ளாதே
எரிமலையாய் எழுந்து வா
விழுந்துவிட்டேன் என்று
கண்ணீர் சிந்துவதை விட
எழுந்து விட்டேன் என்று
புன்னகை செய்!
தளராதே விடாமல் போராடு
தடைகளை உடைத்து தலைநிமிர்ந்திடு...
உன்னால் முடியாது என்று
பலர் விமர்சித்தாலும்
மனம் முடங்கி விடாமல் உனக்கான ஊன்றுகோலை
தேடி எடுத்து தயங்காமல் நிமிர்ந்து நில்!
நம்பிக்கை வைத்து
காலத்தை வென்று காட்டு
காயங்களும் காணாமல் போகும்
துன்பத்தை தூரம் வைத்து
இன்பத்தை இதயத்தில் வைத்து
நம்பிக்கை நமக்குள் வைத்தால்...
சின்ன சின்ன இன்னல்கள் கூட
சின்னாபின்னமாகிவிடும்
எங்கும் எதிலும் வெற்றி பெற
உன்னுள் என்றும் இருக்கட்டும்
தன்னம்பிக்கை என்னும் தீப்பொறி
விடியும் என்ற விண்ணை
நம்புவதைப் போல
முடியுமென்று உன்னை நம்பு
உன்னால் நிச்சயம் முடியும்

**து.கார்த்திகா**
இளங்கலை ஆங்கிலம், முதலாம் ஆண்டு

## அம்மா

உயிர்கள் உருவாக்கப் படவில்லை
ஒவ்வொரு அம்மாவின் உருவங்களாக செதுக்கப்பட்டு உள்ளன.
அம்மா என்பது வார்த்தை இல்லை
பூமியில் இருக்கும் அனைத்து உயிர்களுக்கும் வாழ்வாதாரம்
தந்த கடவுள்
பேசியும் புரியாத உறவுகளுக்கு மத்தியில்
பேசாமல் புரிந்து கொள்ளும் உறவு அம்மா
கேட்டுக் கொடுக்காத தெய்வங்களுக்கு மத்தியில்
கேட்காமல் கொடுக்கும் தெய்வம் அம்மா
கனவு நாயகி கரைந்து (வேதனை) போனாளோ!
தான் பெற்ற (பிள்ளைகள்) தெய்வத்தை பார்த்து
காலங்கள் போயின கவலைகள் கரைந்தன
தான் பெற்ற பிள்ளைகள் தன்னுடன் இருப்பார்கள் என்று!
உயிர்கள் உருவாக்கப் படவில்லை
ஒவ்வொரு அம்மாவின் உருவங்களாக செதுக்கப்பட்டு உள்ளன.

திரு.**கு.வடிவேல்**
உதவியாளர்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

அப்பாவின் கைப்பிடித்து நடந்த
காட்டையும் காணவில்லை!
அம்மாவின் காலடிப் பட்ட
வயலையும் காணவில்லை!
நண்பர்களோடு,
ஓடி விளையாடி விட்டு பின்பு ஓய்வெடுத்த
ஒரு மரங்களைக் கூட காணவில்லை!
குதூகலமாக குதித்து விளையாடிய
குளத்தையும் காணவில்லை!
எங்கு நோக்கிலும் வானுயர்ந்த கட்டிடங்கள்
வரிசைக் கட்டி நின்று

என்னை வரவேற்றது - என்
வருத்தத்தை மேலும் அதிகரித்தது!
காட்டை அழித்து வீட்டைக் கட்டினார்கள்
வீட்டில் எல்லாம்,
செயற்கையால் செதுக்கினார்கள்!
இன்று இயற்கையைத் தேடி
ஏற்காட்டிற்கும் ஊட்டிக்கும் ஓடுகிறார்கள்
தொலைந்தது நம் இயற்கை அல்ல
நம் இன்பமான வாழ்க்கையையும் தான்!
மொத்த மரங்களையும் வெட்டி விட்டு
ஒத்த மரங்களை வளர்ப்போம் என்று
உறுதிமொழி கொள்கிறார்கள்!
அழுக்கே இல்லாத ஆற்றில்
அத்தனை அழுக்கையும் கொட்டிவிட்டு
மாசற்ற உலகம் படைப்போம் என்று
மார்தட்டிக் கொள்கிறார்கள்!
மஞ்சள் பையை மட்டம் என்று எண்ணி
ஒதுக்கி விட்டு - நெகிழிப்பையோடு
நெஞ்சம் நிமிர்த்தி உலா வருகிறார்கள்!
வளர்ச்சி என்ற பெயரில்
வளர்ந்த மரங்களை வெட்டிவிட்டு
வறட்சி, வறட்சி என்று
வருத்தம் கொள்கிறார்கள்!
என் சமூகமே!
இனியாவது திருந்துவோம்!
இயற்கையை நேசிப்போம்!

**உ.சிவபாண்டியன்,**
செயலர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றம்,
இரண்டாம் ஆண்டு இயற்பியல்.

## ஈ.வெ.ரா.பெரியார்

‘வைக்கம் வீரர்’ என்று போற்றப்படும் தீரர் வெண்தாடி வேந்தர் என அழைக்கப்படும் தலைவர் தந்தை பெரியார் என ஏற்றப்படும் தியாகசீலர் ‘ஈரோட்டு சிங்கம்’ - கறுஞ்சட்டை வீரர் என்று பல்வேறு அடைமொழிகளில் அழைக்கப்படும் தமிழ்நாட்டு சாக்ரட்டீஸ், பகுத்தறிவு பகலவன் ஜஸ்டிஸ் பார்ட்டி, பிறகு திராவிடர் கழகம் என்று இவர் அரசியல் வாழ்க்கை இருந்தாலும் ஆரம்பத்தில் இவர் ஒரு காங்கிரஸ்காரர், கதர் சட்டைவீரர், கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆலயப் பிரவேசம் நடத்தியவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் போராடியவர், மூட நம்பிக்கைகளை சாடியவர், என்பதுதான் அவரின் சிறப்பு.

1879 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாளில் கோவை மாவட்டம் ஈரோட்டில் பிறந்தவர். இவர் இயற்பெயர் ராமசாமி, பள்ளியில் அதிகம் படிக்காது போயினும் இவர் மேதை. நிறைய அனுபவம் மிக்கவர்.

வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்தவர். சுதந்திரம் - பகுத்தறிவு - மனிதர்கள் சமம் - ஆண்டான் அடிமை இல்லை. சாதியில் தாழ்வு உயர்வு இல்லை என்பதில் மிக உறுதியாய் நின்றவர். மேல் சாதி ஆதிக்கத்தை இவர் மிகக் கடுமையாகச் சாடினார்,

1919 இல் அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாட்டில் தந்தை பெரியார் காந்தியை சந்தித்தார். இந்த சந்திப்பு இவருக்கு காங்கிரஸ் மீது பற்றுக்கொள்ள காரணமானது. காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து பணி புரிந்தார். 1923 இல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் தலைவர் பதவி பெற்றார்.

காந்திஜி 1927 இல் பெங்களூரில் பெரியாரை விரும்பி அழைத்து நீண்ட நேரம் வரவேற்றுப் பேசினார். காந்திஜியின் மது விலக்கு கொள்கையிலும் இவர் ஆர்வம் காட்டினார். கள்ளுக்கடைகளுக்கு முன்பு சென்று பல இடங்களிலும் மறியலில் ஈடுபட்டார். தனது தோட்டத்தில் கள் இறக்கிட கொடுத்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார் என்றால் இவர் தீவிரத்தை நாம் அறியலாம்.

தீண்டாமை எனும் கொடுமைக்கு மிகவும் பாடுபட்டவர்.

பெரியார் ஈரோடு நகராட்சி தலைவராகவும் பல நற்பணிகள் ஆற்றினார். காந்திஜி ஒத்துழையாமை திட்டம் அறிவித்தபோது இப்பதவியை உதறி அதற்கு ஒத்துழைத்தார். ஏறத்தாழ தான் வகித்த 28 பதவிகளை பெரியார் துறந்தார்.


மனதில் பட்டதை துணிவோடு சொல்லும் ஆற்றல் மிக்கத் தீரர். கடவுள் உருவ வழிபாட்டையும், கருத்துக்களையும் சாடினார். நீதிக்கட்சியில் இருந்தார். பிறகு இவரே ‘திராவிடர் கழகம்’ என்ற கட்சியை துவக்கி, தேர்தலில் நிற்காது, பதவியை நாடாது சமூகச்

சீர்திருத்தம் ஒன்றிலேயே கவனம் செலுத்தினார். பல நூல்களை எழுதினார்.

விடுதலை என்ற நாளேட்டைத் தொடர்ந்து நடத்தி வந்தார். இன்றைய திராவிட கட்சிகளுக்குக்கெல்லாம் தாய் ஸ்தாபனம் - தி.க தான் இறுதிவரை வெண்தாடியையும் கருஞ்சட்டையையும் அணிந்து வாழ்ந்தார். நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ்ந்து, தான் தேடிய செல்வத்தை பல கல்வி நிறுவனங்களுக்குச் பெரியாரை இன்றும் நினைவில் நிறுத்துவோம்.

**மா.சத்தியவாணி**


இளங்கலை முதலாம் ஆண்டு, ஆங்கில இலக்கியம்




முனைவர் **வெ.சங்கீதா,**
உதவிப்பேராசிரியர்,
கணினிஅறிவியல் துறைத்தலைவர்.



**ச.ஆர்த்தி,**
இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு.



**ப.பீரதீப்,**

இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு.




**T.சத்யா,**

இளம் அறிவியல் இயற்பியல், மூன்றாம் ஆண்டு.



**ச.தமிழழகன்,**

முதலாம்ஆண்டு,

இளங்கலை ஆங்கில இலக்கியம்.



**K.ஸ்ரீனா,**

இளம்கணினிஅறிவியல், இரண்டாம் ஆண்டு.




**மு.சஞ்ஜீவி,**
இளங்கலை முதலாம் ஆண்டு
ஆங்கில இலக்கியம்.



**அ.அக்ஷலா,**
இளங்கலை முதலாம் ஆண்டு,
ஆங்கில இலக்கியம் துறை.



**ச.சத்தியப்பிரியா,**
இரண்டாம் ஆண்டு,
இளம்கணினி அறிவியல்.



**மா.தமிழ்பார்த்தீபன்,**
இளங்கலை ஆங்கிலம் முதலாம் ஆண்டு,



வணிகவியல் துறை



இயற்பியல் துறை




சமூகவியல் துறை



அலுவலக பணியாளர்கள்




தூய்மை பணியாளர்கள்




காவல் பணியாளர்கள்




கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தருமபுரி-மாவட்டம்-636 905.
CANTEEN